இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 18.12.2025

# காந்தியின் ராம ராஜ்யமும், பா.ஜ.க.வின் வதை ராஜ்யமும்!

“காந்தி விரும்பியது ராம ராஜ்யம்தான். அவருக்கு விருப்பமான ராமர் பெயரைத் தானே வைத்திருக்கிறோம்” என்று ஒன்றிய அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார். அவருக்கு காந்தியையும் தெரியவில்லை. அவர் சொன்ன ராமராஜ்யமும் புரியவில்லை.

‘மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்ட’த்தின் பெயரை ‘விக்சித் பாரத் ராம்ஜி திட்டம்’ என்று மாற்றிவிட்டார்கள். காந்தியின் பெயரைப் பார்த்தால் அவர்கள் கண்ணுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதனால் அதனைத் தூக்கி விட்டார்கள். துண்டித்து விட்டார்கள். அதற்காக அவர்கள் சொன்ன காரணம் தான் அவர்களது அறியாமையைக் காட்டுகிறது.

காந்தியடிகள் சொன்ன ராமராஜ்யம் வேறு. இன்று பா.ஜ.க. செய்து கொண்டிருக்கும் வதை ராஜ்யம் வேறு.

**1.இந்தியாவில் இந்துக்கள் தவிர வேறு யாரும் வாழக்கூடாது என்று இந்துக்கள் யாராவது நினைத்தால் அவர்கள் தங்கள் மதத்தையே அழிக்கிறார்கள்.**

**2.தீண்டாமை என்ற விஷம் இந்த மதத்துக்குள் புகுத்தப்பட்ட போதே அதன் சரிவும் தொடங்கிவிட்டது.**

**3. ஒவ்வொருவனும் தனது சமயத்தின் உண்மையை அறிந்து, போலிக் குருக்களின் போதனையைக் கேளாமல் இருந்தால் சச்சரவுக்கு இடம் இருக்காது.**

**4. இந்து-முஸ்லிம் ஒற்றுமை, சத்தியாகிரகம் ஆகிய இரண்டுக்குமே என் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்.**

**5. தனிநபர் செய்த குற்றத்தை ஒரு சமூகத்தின் மீது சுமத்தாமல் இருப்போமாக.**

**6. சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்ற தடையை நான் ஆதரிக்க முடியாது. நாம் அந்நியர்க்கு அடிமையாக இருந்து வரும் வரையில் அனைவருமே சூத்திரர்களே.**

**7. இன்றைய சாதி முறை, வர்ணாசிரமத்துக்கு விரோதமானது.**

**8. நான் கொல்லப்பட்டாலும் கூட ராமா, ரகீம் என்ற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை விடமாட்டேன். அவ்விரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்.**

**9. இந்துஸ்தான் இந்துக்களுக்கு, பாகிஸ்தான் முஸ்லீம்களுக்கு என்று ஆனால் இரண்டுமே விஷம் வழிந்தோடும் நாடாகிவிடும்.**

**10. அரசியலில் மதத்தைக் கலந்த பாவத்தைச் செய்தது நான்தான். அதற்கான தண்டனையை நான் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.**

இப்படிச் சொன்னவர் காந்தியடிகள். அவரது சொல்லில் ஒன்றைக்கூட ஏற்றும் கொள்ளுமா பா.ஜ.க.?

“இந்தியாவில் இந்துக்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்று இந்துக்கள் நினைப்பதாயிருந்தால், இந்துக்களல்லாதவர்கள், முக்கியமாக முஸ்லிம்கள் இங்கே வாழ விரும்பினால் இந்துக்களின் அடிமைகளாகத்தான் வாழ வேண்டும் என்று நினைத்தால், இந்துக்கள் இந்து மதத்தையே கொன்று விடுகிறார்கள்.

இதேபோன்று பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்கு மாத்திரமே நியாயமான உரிமை உண்டு என்று பாகிஸ்தான் நம்பினால், முஸ்லிம் அல்லாதவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும் தங்கள் அடிமைகளாகவுமே வாழ முடியும் என்று நம்பினால், இந்தியாவில் இஸ்லாமுக்கு சாவு மணி அடித்துவிட்டதாகவே ஆகும்” என்று சொன்னவர் காந்தியடிகள். இதனை ஏற்றுக் கொள்ளுமா பா.ஜ.க.வின் மதவாத அரசியல்?

**“ராமராஜியம் என்று நான் கூறுவது இந்து ராஜ்ஜியத்தை அல்ல. ராம ராஜ்ஜிய தெய்வீக ராஜ்ஜியம், கடவுளின் ராஜ்ஜியம் என்று நான் கூறுகிறேன். எனக்கு ராமரும் ரஹீமும் ஒரே கடவுள். சத்தியமும் நீதியும் கொண்ட ஒரே கடவுளைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை.**

என் கற்பனையில் ராமர் இந்த பூமியில் வாழ்ந்தாரோ இல்லையோ, ராம ராஜ்ஜியத்தின் பண்டைய இலட்சியம் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையான ஜனநாயகத்தின் ஒரு இலட்சியமாகும், அதில் மிகவும் கீழ்த்தரமான குடிமகனும் விரிவான மற்றும் விலையுயர்ந்த நடைமுறை இல்லாமல் விரைவான நீதியை உறுதி செய்ய முடியும்” என்று சொன்னவர் அண்ணல்.

“ஒரு சிலர் மட்டுமே செல்வத்தில் மூழ்கி, மக்கள் போதுமான அளவு சாப்பிட முடியாத அளவுக்கு சமத்துவமின்மை நிறைந்த தற்போதைய நிலையில் ராம ராஜ்ஜியம் இருக்க முடியாது” என்று சொன்னார்.

**ஆனால் பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் இந்திய நாட்டின் நிலைமை என்ன? பா.ஜ.க. ஆட்சியின் தவறான செயல்பாடுகளால் கிராமப்புற, நகர்ப்புற மக்களின் வறுமை அதிகமாகி இருக்கிறது. வேலையின்மை அதிகம் ஆகி இருக்கிறது. அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகமாகி இருக்கிறது. பணக்காரர்களை அதிக பணக்காரர்களாகவும், ஏழைகளை அதிக ஏழைகளாகவும் மாற்றி இருக்கிறது மோடி அரசின் பொருளாதார நடவடிக்கைகள். சமத்துவமின்மையே அனைத்து நிலைகளிலும் அதிமாகி இருக்கிறது.**

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பெண்கள், இளைஞர்கள், உழவர்கள் ஆகியோர் பா.ஜ.க. அரசால் கண்டுகொள்ளப்படவில்லை. அவர்களுக்காக சிறப்புக் கவனிப்புத் திட்டங்கள் இல்லை. கல்வியை முன்னேற்றத்தில் இருந்து பின் தங்கிய காலத்துக்கு கொண்டு செலுத்தத் திட்டமிடுகிறார்கள்.

**வரிப் போடுவது. அதற்கும் மேல் வரிப் போட்டு வதைப்பதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒற்றை நடவடிக்கையாக இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் விழுமியங்களையும் மதிப்பதே இல்லை. மாநிலங்களை கழிப்பறைகளை விடக் கேவலமாக நினைக்கிறார்கள். இனம், மொழி, பண்பாடு என பலதரப்பட்ட மக்கள் வாழும் நாடு என்ற எண்ணத்தையே மறந்து, ஒற்றைத் தன்மை கொண்டதாக மாற்றத் துடிக்கிறார்கள்.**

மதம் நீங்கலாக அனைத்தும் காலில் போட்டு மிதிக்கப்படுகிறது. தனது சகிப்பின்மையை அவதூறுகளாக வெளிப்படுத்தி சமூகத்தில் சக மனிதனை விரோதிகளாக்கி, அமைதியற்ற சூழலை உருவாக்குவதே பா.ஜ.க.வின் பாணியாக இருக்கிறது. அதற்காக சொந்த மதத்தினருக்கு நன்மை செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. மத உணர்வுகளைத் தூண்டி, ஒரு சில கார்ப்பரேட் கம்பெனிக்கு அரசு மூலதனத்தை திருப்புவது மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒற்றைக் கொள்கையாக இருக்கிறது.

“என்னுடைய இந்து மதம் எல்லா மதங்களையும் மதிக்கக் கற்றுக்கொடுக்கிறது. இதில்தான் ராமராஜ்ஜியத்தின் ரகசியம் இருக்கிறது” என்று சொன்னவர் அண்ணல் காந்தி. நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டாம், அடுத்தவரை மதிக்க பா.ஜ.க.வால் முடியுமா? அந்த சகிப்புத் தன்மையாவது உண்டா அவர்களுக்கு?




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் ஜோ. அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சிறுபான்மையின மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட “தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 38 மாவட்ட கள ஆய்வு அறிக்கை 2025”யை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறை செயலாளர் எ. சரவணவேல்ராஜ், துறை ஆணையர் திருமதி மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத திட்டம் –

# தமிழ்நாட்டில் பள்ளி சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம்!

## ஒட்டன்சத்திரத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம், டிச. 17-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட கேதையுறும்பு, தும்மலப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் 110/22 கி.வோ துணை மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-



தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் கட்சி, இனம், மதம் பாகுபாடு இன்றி ”எல்லோருக்கும் எல்லாம்” என்ற நோக்கில் அனைவரும் பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கேதையறும்பில் துணை மின் நிலையம் அமைப்பது என்பது பல ஆண்டுகாலமாக இருந்து வந்த கோரிக்கையாகும். அது இன்றையக்கு நனவாகி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்பகுதியில் குறைந்த மின் அழுத்தம் வராது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அம்பிளிக்கை, மரிச்சிலம்பு, தும்மலப்பட்டி, கேதையுறும்பு ஆகிய நான்கு இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கேதையறும்பு பல்வேறு திட்டங்களின் மூலமாக வரைபடத்தில் இடம்பெற இருக்கிறது.

கேதையுறும்பு ஊராட்சியில் உள்ள கேதையுறும்பு பிரிவு மின் வாரிய அலுவலகத்திற்கு இதுநாள் வரை ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், சின்னக்காம்பட்டி ஆகிய துணை மின் நிலையங்களில் இருந்து மின் விநியோகம் இருந்து வந்தது. மேலும், தற்போது சுமார் ரூ.8.9 கோடி மதிப்பீட்டில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி பெறப்பட்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய 110/22 கி.வோ கோதையுறும்பு துணை மின் நிலையத்தின் மூலமாக குறைமின் அழுத்தம் மற்றும் அதிக மின் பளு சரி செய்யப்பட்டு, கேதையுறும்பு, பழையபட்டி, முத்துநாயக்கன்பட்டி, புலியூர் நத்தம், கல்லுப்பட்டி, சட்டையப்பனூர், நவாமரத்துப்பட்டி, வெரியப்பூர், மூனூர், திப்பம்பட்டி, தேவசின்னம்பட்டி, திருமாணிக்கபுரம், தாத்தாரகவுண்டனூர், செம்மடைப்பட்டி ஆகிய பெரிய மற்றும் 30க்கும் மேற்பட்ட சிற்றூர்களுக்கும் குறைமின் அழுத்தம் மற்றும் அதிக மின் வகை சரி செய்யப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு பெண்களின் நலனுக்காக நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணிற்கும் மாதம் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் போன்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 1.16 கோடி பெண்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், கடந்த 12.12.2025 அன்று 17 இலட்சம் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், தகுதியான நபர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சுமார் 20.00 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை.

6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில்(தமிழ் வழிக்கல்வி) படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘புதுமைப் பெண்’ திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது உயர்ந்துள்ளது. இதேபோல் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் ”தமிழ்ப் புதல்வன்” திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு திட்டத்தின் மூலம் 12 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனார்.

அம்பிளிக்கையில் பெண்கள் மட்டும் படிக்கும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இந்தக்கல்லூரி மாணவிகளுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவு பழனி திருக்கோயில் சார்பில் வழங்கப்படுகிறது. இந்தக் கல்லூரிக்கு ஒட்டன்சத்திரத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

விருப்பாட்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவ, மாணவிகளுக்கு மாத ஊக்கத்தொகை ரூபாய் 750/மும், தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூபாய் 1000 உரிமைத்தொகையும் வழங்கப்படுகிறது.

படித்து முடித்த மாணவ, மாணவிகள் போட்டித் தேர்வில் வெற்றி பெற காளாஞ்சிப்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் குளிர்சாதன வசதியுடன் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் பயிற்சி பெற்ற மாணவிகள் பல்வேறு போட்டி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். எனவே, இப்பயிற்சி மையத்தினை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சென்னை அடையாறில் உள்ள அண்ணா இன்ஸ்டியூட்டுக்கு அடுத்தபடியாக காளாஞ்சிப்பட்டி மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொப்பம்பட்டியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக உருவாக்க கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் 8 இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, 2 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கலைஞர் கனவு இல்லத்திற்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 10,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தில் 2.50 இலட்சம் வீடுகளை சீரமைக்க ரூ.2000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்திலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் குடிமைப்பொருட்கள் பெற்று பயன்பெறும் வகையில் முழு நேர நியாயவிலைக் கடை, பகுதிநேர நியாய விலைக்கடை என தமிழ்நாட்டில் 3000 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் 300 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் விதமாக எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தும் விதமாக என்றென்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் எஸ்.சரவணன், பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சைகாந்தி, நகரச்செயலாளர் வெள்ளைச்சாமி, திண்டுக்கல் மேற்பார்வை பொறியாளர் சாந்தி, செயற்பொறியாளர்கள் கமலக்கண்ணன், சந்திரசேகரன் ஒன்றிய செயலாளர்கள் ஜோதிஸ்வரன், பாலு, பொன்ராஜ், சுப்ரமணி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### புதிய தொழிலாளர் நலச் சட்டத்தின் வாயிலாக

# தொழிலாளர் நலனும் பணியும் பாதுகாக்கப்படுமா?

## மக்களவையில் - தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 18-

ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் நல சட்டத் திருத்தங்களால் தொழிலாளர் நலன் மற்றும் பணி பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் அதற்கு உடனடி தீர்வு காண அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன் ஒன்றிய தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்துக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு:-

ஒன்றிய அரசின் தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் “தொழிலாளர் நலனுக்கு விரோதமானவை” என தொழிற்சங்கங்கள் எதிர்ப்பதையும் பத்திரிகை ஊடகங்கள் அதுபற்றி சுட்டிக்காட்டுவதையும் ஒன்றிய அரசு அறிந்துள்ளதா? அவ்வாறு அறிந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

நான்கு புதிய சட்டத்திருத்தங்களை அறிவிப்பதற்கு முன்னர் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் விவரங்கள் மற்றும் அவர்களின் முக்கிய கோரிக்கைகள் என்ன?



குறிப்பிட்ட சட்டத்திருத்தங்களின் அமலாக்கத்திற்கான கால அட்டவணையின் விவரங்கள், ஒப்புதல் அளித்த நடைமுறைக்கு வந்த தேதி விபரங்கள் என்ன? மாநில வாரியாக தொழிலாளர்களுக்கான இடைக்கால பாதுகாப்புகள் மற்றும் சமூக பாதுகாப்பு விவரங்கள் என்ன?

100 முதல் 300 தொழிலாளர்கள் வரை உள்ள நிறுவனங்கள் அரசின் முன் அனுமதி இல்லாமல் பணி நீக்கம் மற்றும் ஆட்குறைப்பு செய்யலாம் என்ற விதியை ஒன்றிய அரசு எவ்வாறு நியாயப்படுத்துகிறது? தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பு மற்றும் வேலை உத்தரவாதம் மீதான அரசின் நோக்கம் என்ன?

பங்குசந்தை உள்ளிட்ட தளங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஒப்பந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், குறிப்பாக ஜவுளி, கட்டுமானம் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) போன்ற துறைகளில் உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம், தொழிலாளர் நல பாதுகாப்பு என்ன? அவர்களின்புகார்களுக்கு தீர்வு காண்பதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளின் விவரங்கள் என்ன?

என்று மக்களவையில் தயாநிதிமாறன் கேள்வி எழுப்பினார்.